## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஹொரணை வித்தியரத்ன சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1986 ஆம் ஆண்டு ஒக்றோபர் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*


**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1986, ஒக்ரோபர் மாதம் 10 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 75*

# 1986 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஹொரணை வித்தியாத்ன சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1986 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 43/85
1834

## ஹொரணை வித்தியாத்ன சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"ஹொரணை வித்தியாத்ன சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள் ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்தோடு தொடர்பு பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் ஹொரணை என்னு மிடத்தில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காக வும் கருமங்களாகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக் கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஹொரணை வித்திய ரத்ன சங்க (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், (இத னகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஹொரணை வித்தியாத்ன சங்கத்தில் தற்போது உறுப்பினராகவுள்ள அல்லது இத் தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இத னகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "ஹொரணை வித்தியாத்ன சங்கம்" என்னும் பெயர் மருடத்தின்கீழ் இடையறுவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத் தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களி லும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக் குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் ,விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும். ஹொரணை வித்தியாத்ன சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படு கின்றது :— கூட்டுத் தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

(அ) ஹொரணையிலுள்ள வித்தியாத்ன பிரிவேனைப் பல்கலைக்கழகக் கல் லூரியையும், ஹொரணை தம்மரத்ன பிரிவேனையையும், இதன்பின் னர் தாபிக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் பாடசாலையையும் அல்லது நிறுவனத்தையும் முகாமைசெய்து பேணிக் காப்பதன் மூலம் பௌத்த கல்வியை மேம்படுத்தல் ;

(ஆ) தேசிய, பண்பாட்டுச் சேவை நிலையத்தினைத் தாபித்தலும் முகாமைசெய்தலும், பேணிக் காத்தலும்;

(இ) பௌத்த பண்பாட்டை மேம்படுத்தலும், பௌத்த மதத்தைப் பரப்புதலும்;

(ஈ) சமூக நலனை முன்னேற்றுதல்;

(உ) புத்தகங்களையும், சஞ்சிகைகளையும், பருவவிதழ்களையும், துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு, வெளியிடுதல்.

கூட்டுத் தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், அளிப்புக்களையும் கொடைகளையும் பெறவும், அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடுசெய்யவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கம்செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபன அலுவல்களின் நிருவாகம்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபன விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடியவர்களான பதவிதாங்குநர்களையும், அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த ஆளுநர் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆளுநர்சபை, இச்சட்டம் தொடங்கும் நேரத்தில் பதவி வகிக்கின்றவர்களும் இதற்கான அட்டவணையில் பெயர் குறிந்துரைக்கப்பட்டவர்களுமான உறுப்பினர்களைக் கொண்டமைந்ததுமான ஆளுனர் சபையாகவிருத்தல் வேண்டும்.

விதிகளை ஆக்குவதற்குள்ள தத்துவம்.

6. (1) உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும், உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், விளப்பெறுதல், விலக்குதல் என்பனவற்றுக்காகவும், ஆளுநர் சபையினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் ஆகியோரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், அலுவல்களைக் கையாளுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், பொதுவில் வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை நிருவகிப்பதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகள் அவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் போன்று அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதேபோன்ற முறையிலும் மாற்றப்படலாம், திருத்தப்படலாம் நீக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராகவிருத்தல் வேண்டும்.

*ஆதனம் உரித்தாக்கப்படுதல்.*

7. இச்சட்டம் தொடங்குவதன்மேல் சங்கத்தின் அசைவற்ற, அசைவுள்ள எல்லா ஆதனங்களும் அவை சங்கத்தின் பெயரில் வைத்திருக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது சங்கத்திற்கு நம்பிக்கைப்பொறுப்பாக எவரேனும் ஆட்களின் பெயர்களில் வைத்திருக்கப்பட்டனவாயினுஞ்சரி கூட்டுத்தபானத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், இத்தால் உரித்தாக்கவும்படுகின்றன. இனிமேல் கொள்ளப்படவிருக்கும் அசைவுள்ள, அசைவற்ற எல்லா ஆதனங்களுடனும் சேர்த்து அத்தகைய ஆதனமும், அத்துடன் பெறப்பட்ட அல்லது பெறப்படவிருக்கும் எல்லா ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும், நன்கொடைகளும், கடன்களும், முற்பணங்களும் சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றல் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவான அல்லது சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான கடன்கள்.*

9. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இந்தச் சட்டம் தொடங்கும் நேரத்தில் சங்கத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சங்கத்திற்கு வருமதியான எல்லாக் கடன்களும் சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும், கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படல் வேண்டும் என்பது.*

10. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, ஆளுநர் சபையின் உறுப்பினர்களுள் குறைந்தது இருவர் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அத்தகைய உறுப்பினர்கள், அவர்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களதும் உரிமைகளைப் பேணுதல்.

11. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப் படுத்துவதாதலோ பாதிப்பதாதலோ ஆகாது.

அட்டவணை [பிரிவு 5 (2)]

(1) வணக்கத்துக்குரிய ஹொரணை ஸ்ரீனலங்கா மஹாதேரோ,
(2) வணக்கத்துக்குரிய கஹடபிடிய ராஹூல தேரோ,
(3) வணக்கத்துக்குரிய ஹொரணை வஜிரஞான தேரோ,
(4) வணக்கத்துக்குரிய ரெதியால பன்னசார தேரோ,
(5) வணக்கத்துக்குரிய எச். பன்னசேகர தேரோ,
(6) வணக்கத்துக்குரிய வை. மகிந்த தேரோ,
(7) வணக்கத்துக்குரிய எச். சுமங்கல தேரோ,
(8) வணக்கத்துக்குரிய எச். ஞானவிமல தேரோ,
(9) வணக்கத்துக்குரிய ஐ. தம்மலங்கார தேரோ,
(10) வணக்கத்துக்குரிய யூ. தம்மசிறி தேரோ,
(11) வணக்கத்துக்குரிய என். சரணசிறி தேரோ,
(12) திருவாளர் பி. டபிள்யு. எதுருசூரிய,
(13) திருவாளர் ரி. கன்னங்கர,
(14) திருவாளர் கே. ஏ. பியசேன பெரேரா,
(15) திருவாளர் ஜி. டி. எல். குணவர்தன,
(16) திருவாளர் எம். வேவத்தகே,
(17) திருவாளர் சிரிசோம திலகரத்ன,
(18) திருவாளர் டி. ஈ. கான்னகொட,
(19) திருவாளர் டி. டி. எதிரிமன்ன,
(20) திருவாளர் டி. என். வெலிகல.
(21) திருவாளர் டி. விஜேசிரிவர்தன.

**பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.**